


# பேராலய ஒலி

## பங்கு மாத இதழ்



ஒலி – 06 ஏப்ரல் – 2021 அலை – 4



# பங்குப் பணியாளர்களிடமிருந்து...

## அன்புக்குரியவர்களே,

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்புப் பெருநாள் வாழ்த்துகளை தங்களுக்கு தெரிவிப்பதில் எல்லையற்ற மகிழ்ச்சி. நமக்கும் இவ்வுலக மாந்தர் அனைவருக்கும் படைப்பனைத்திற்குமே வாழ்வும், விடுதலையும், மீட்பும் தரும் நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு என்னும் பாஸ்காவைக் கொண்டாடி புதிய வாழ்வுக்குக் கடந்து வந்திருக்கிறோம். கடந்த ஆண்டு கொண்டாட இயலாத நிலையில் இந்த ஆண்டு பாஸ்காவைக் கொண்டாடி மகிழ இறைவன் அருள்புரிந்தார்.

நாம் இயேசுவின் உயிர்ப்பின் பெருமக்கள் என்று நம்மை அழைத்து மகிழ்வார் புனித அகுஸ்தினார். இயேசுவின் உயிர்ப்பு தரும் மகிழ்ச்சியும், நம்பிக்கையும், ஊக்கமும், ஆற்றலும் நம்மில் நிறையட்டும். நான் வாழ்கிறேன், நீங்களும் வாழ்வீர்கள் (யோவான் 14:19) என்ற நம் ஆண்டவர் இயேசுவின் இவ்வார்த்தைகள் நம் வாழ்வில் உண்மையாயிற்றா என சிந்திப்போம்.

இயேசுவின் உயிர்ப்பு என்பது முடிந்தபோன ஒரு நிகழ்வு அல்ல. அது ஒரு பயணம். அவரது உயிர்ப்பு இன்றும் நம்மிடையே நிகழ்கிறது.

எங்கெல்லாம் உண்மையான மனித வாழ்வு திளைக்கிறதோ, எங்கெல்லாம் ஆதிக்க உணர்வை நீதி உணர்வு வெல்லுகிறதோ, எங்கெல்லாம் பாவத்தின் சக்தியை அருளில் வல்லமை மேற்கொள்ளுகிறதோ, எங்கெல்லாம் தங்கள் சமூக வாழ்வின் எல்லா நிலைகளிலும் சகோதர உறவுகளை மனிதர்கள் படைக்கிறார்களோ, எங்கெல்லாம் சுயநல வரையறைகளை அன்பு கடந்து செல்லுகிறதோ, எங்கெல்லாம் அவநம்பிக்கையை நம்பிக்கை தகர்த்தெறிகிறதோ. அங்கெல்லாம் கிறிஸ்துவின் உயிர்ப்புப் பயணம் நமது வாழ்விலும் உண்மையாகிறது.

புதிய உலகம்... புதிய மனிதர்கள்... அவர்களோடு புதியதான உறவுகள்... புதுமையான சிந்தனைகள்... புதுப் புதுக் கனவுகள்... புத்தம் புது நம்பிக்கைகள்... ஆம். மானுடத்தில் இந்த உயிர்ப்புப் பயணம் நீண்டது... நெடியது... இனியதும் கூட.

ஆசியுடன்,

**அருள்திரு. த. சகாயராஜ்,** பங்குப்பணியாளர்

**அருள்திரு. சு. மரியசூசை,** உதவிப்பங்குப்பணியாளர்

## மார்ச் மாதத்தில் பங்கில் நிகழ்ந்தவை

- 5ஆம் தேதி காலை 10 மணிக்கு முதியோர் மற்றும் நோயுற்றோருக்கான சிறப்பு நோயில் பூசுதல் திருப்பலி நடைபெற்றது.
- பங்கின் தவக்காலத் தியானம் 13ஆம் தேதி சனி மாலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், 14ஆம் தேதி ஞாயிறு காலை 10.30 மணி முதல் மதியம் 1.30 மணி வரையிலும் நடைபெற்றது.
- 20ஆம் தேதி சனி இரவு 10 மணி முதல் அடுத்த நாள் காலை 4 மணி வரை தவக்கால சிறப்பு அருங்கொடை முழு இரவு செப வழிபாடு நடைபெற்றது.
- 24ஆம் தேதி புதன் மாலை 4.30 மணிக்கு தவக்கால சிற்றூர் சந்திப்பாக லூர்து நகர் பங்கின் அரசங்குடி மற்றும் விளாங்குளம் ஆகிய கிராமங்களுக்குச் சென்று சிலுவைப்பாதை செபித்து திருப்பலி நிறைவேற்றினோம்.
- 28ஆம் தேதி குருத்து ஞாயிறு அன்று காலை 6.30 மணிக்கும், மாலை 5.00 மணி (ஆங்கிலம்) மற்றும் மாலை 6.00 மணி (தமிழ்) திருப்பலிகள் நடைபெற்றன.
- 29ஆம் தேதி திங்கள் மாலை 5.30 மணிக்கு நமது மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் தேவதாஸ் அம்புரோஸ் அவர்களின் தலைமையில் திருத்தைலம் மந்திரிப்பு திருப்பலியானது கொண்டாடப்பட்டது.
- 31ஆம் தேதி புதன் மாலை ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது.

**பங்கு இறைமக்கள்**

**அனைவருக்கும் உயிர்ப்பு பெருவிழா**

**நல்வாழ்த்துகள்!**

– பங்குத்தந்தையர்

## ஏப்ரல் மாதத்தில் பங்கில் நிகழவிருப்பவை

- 01ஆம் தேதி மாலை 6.00 மணிக்கு பேராலய வளாகத்தில் புனித வியாழன் திருச்சடங்குகளும், திருப்பலியும் நடைபெறும். தொடர்ந்து நள்ளிரவு வரை நற்கருணை ஆராதனை நடைபெறும்.
- 02ஆம் தேதி காலை 5.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நற்கருணை ஆராதனை நடைபெறும். மாலை 6.00 மணிக்கு புனித வெள்ளி திருச்சடங்குகளும், திருச்சிலுவைப்பாதையும் நடைபெறும்.
- 02ஆம் தேதி காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை பேராலயத்தின் கீழ்தளத்தில் பேராலய இளையோர் இயக்கத்தினரால் வழிநடத்தப்படும் இரத்ததான முகாம் நடைபெறும்.
- 03ஆம் தேதி புனித சனி அன்று இரவு 11 மணிக்கு பாஸ்கா திருவிழிப்பு திருச்சடங்குகள் ஆரம்பமாகும்.
- 04ஆம் தேதி ஞாயிறு இயேசுவின் உயிர்ப்பு பெருவிழா திருப்பலியானது காலை 6.30 மணி மற்றும் 8.30 மணிக்கும் நடைபெறும். அன்று மாலை 6.00 மணிக்கு நற்கருணை ஆசீர் மட்டும் நடைபெறும்.

### புதுநன்மை மற்றும் உறுதிப்பூசுதல்

**அருளடையாளங்களுக்கான தயாரிப்பு வகுப்புகள்**

நாள்கள் : **07.04.2021 முதல் 17.04.2021 வரை**

நேரம் : காலை 9.00 மணி முதல் 12.30 மணி வரை

இடம் : பேராலயத்தின் கீழ்தளம்

### பங்கில் புதுநன்மை வழங்கும் விழா

நாள் : **18.04.2021, ஞாயிறு**

நேரம் : காலை 8.30 மணி திருப்பலி



# காவிரி தென்றல்
# பேராலய பெண்கள் பணிக்குழுவின்
# பெண்கள் தினவிழா – 2021

இவ்வாண்டு அகில உலக பெண்கள் தின விழா 14.03.2021 அன்று மாலை புனித மரியன்னை பேராலய அரங்கத்தில் பெண்கள் பணிக்குழு உறுப்பினர்களால் கொண்டாடப்பட்டது. பங்குத்தந்தை த. சகாயராஜ் மற்றும் உதவி பங்குத்தந்தை சு. மரிய சூசை அவர்கள் தலைமையில் தமிழ்தாய் வாழ்த்தோடு விழா இனிதே ஆரம்பமானது. தொடக்கத்தில் இக்குழுவின் உறுப்பினர்கள் இறைவணக்கம் பாடினர். பின்னர் திருமதி. ஹேமா ஸ்டீபன் வரவேற்புரை நிகழ்த்தினார். கடந்த ஆண்டின் ஆண்டு அறிக்கையை இக்குழுவின் தலைவி பேராசிரியர் லீமா ரோஸ் வாசித்தார். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினர்களாய் தமிழ்நாடு தொழில் முனைவோர் சங்கத்திலிருந்து திருமதி. கயல்விழி (Garments), திருமதி. அலமேலு (சிறுதானியம்), திருமதி. பொன் செல்வி (Bakery), திருமதி. சந்தோஷ் மேரி (பாக்கு மட்டை தட்டு) பங்கேற்றனர். சிறுபான்மையினர் நலத்துறை மகளிர் உதவும் சங்கத்திலிருந்து திருமதி. பிலோமின் அவர்கள் பங்கேற்று சுயமாக பெண்கள் தொழில் செய்வதற்கு ஊக்கப்படுத்தினார்கள். அதற்கான வழி வகைகளை வரும் நாட்களில் கற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்கள். கொரோனா காலங்களில் மருத்துவ துறையில் சிறப்பாக பணியாற்றிய செவிலியர்கள், துப்புரவு பணியாளர்கள் ஐந்து பேருக்கு கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி முன்னாள் பேராசிரியர் செல்வி. வி. லீமா ரோஸ் அவர்கள் விருது வழங்கி சிறப்பித்தார். பேராசிரியர், டாக்டர் சகாய அமுதா, உடற்கல்வி ஆசிரியர் பெர்னா அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினர். பங்குத்தந்தை த. சகாயராஜ் பெண்கள் தினத்திற்கு வாழ்த்துரை வழங்கினார். அனைத்துப் பெண்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பேராசிரியர் Dr. G.J. லீமா ரோஸ் அவர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்து நன்றியுரை ஆற்ற இரவு விருந்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

திருமதி. **லீமா ரோஸ்**, தலைவர்

# முத்தான மூன்று தினங்கள்

ஆண்டுதோறும் மிக உருக்கமாக - மிக சிறப்பாக பெரிய வியாழன், பெரிய வெள்ளி, இயேசுவின் உயிர்ப்பு விழாவை நாம் வாடிக்கையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். இதோ இப்போது… நம்பிக்கை ஒளியில் இதனைக் கொஞ்சம் ஆழமாக அசைப் போட்டுப் பார்ப்போம்.

**புனித வியாழன்** : கத்தோலிக்க கிறிஸ்துவர் ஒவ்வொருவருக்கும் இந்நாள் மிகமிக முக்கியமான நாள் என்பதை யாராலும் மறுக்க முடியாது. காலமெல்லாம் நம்மோடு வாழ இறைமகன் இயேசு அப்பம் - திராட்சை இரசத்தில், தன் உடலையும் இரத்தத்தையும் பொதிந்துத் தந்த அற்புத நாள் இந்நாள். மிக சிறிய அப்ப வடிவில் அவர் தினம் தினம் திருப்பலி வேளையில் நம் இதயத்தில் எழுந்து வருகிறார். இந்த அற்புத நாளை - அன்பின் நாளைப்பற்றி நாம் என்றாவது நன்றியோடு சிந்தித்து ஆண்டவர் இயேசுவுக்கு நன்றிக் கூறியிருக்கிறோமா…?

இப்புனித நாள் நமக்கு சில பாடங்களைக் கற்பிக்கிறது. அவரைப்போல் நாமும், அனைத்து மக்களையும் அன்பு செய்ய வேண்டும். நம்மையேப் பகிர்ந்தளிக்க வேண்டும்; பிறருக்குத் தொண்டாற்றுவதே தலைமைத்துவத்தின் உன்னத அடையாள என்பதை தம் சீடர்களின் பாதங்களைக் கழுவி முத்தமிட்டதன் மூலம் இயேசு நமக்கு முன்னுதாரணம் காட்டினார். எளிமை, உடன் வாழும் உள்ளம், பிறருக்கு பணி செய்தல் மூலம் நாமும் அவரது உண்மைச் சீடர்களாகிவோம். இவ்வளவு காலம் எப்படி இருந்தோமோ தெரியாது. இனியாவது இப்படி வாழ்ந்து இறைவனுக்கு சான்று பகர்வோம். திவ்ய நற்கருணைக்கு தனி மரியாதை செய்வோமே!

**புனித வெள்ளி** : இந்நாளை நாம் ‘Good Friday’ - நல்ல வெள்ளி என்கிறோம். இயேசு இறந்த நாளை, கொலை செய்யப்பட்ட நாளை ஏன் புனித வெள்ளி – நல்ல வெள்ளி என்றெல்லாம் அழைக்கிறோம்…? அன்றுதான் நம் இயேசுபிரான் தன் தந்தையின் திருவுளத்தை நிறைவு செய்தார். “கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையேத் தாழ்த்திக் கொண்டார்” (பிலி 2:6-8).

வாழ்நாள் முழுவதும் இறைத் திருவுளத்தை நிறைவேற்றுவதே இயேசுவின் நோக்கமாக இருந்தது. அதன் உச்சக் கட்டமாக சிலுவையில் இயேசு "எல்லாம் நிறைவேறிற்று" (யோவா 19:30) என்று மன நிறைவோடுக் கூறி தன் இன்னுயிரை மனித குல மீட்புக்காகக் கையளித்தார். நம்முடைய வாழ்வில் இறைத் திருவுளத்தை நாம் எப்படி ஏற்கிறோம்? எல்லாம் சுமூகமாக செல்லும்போது, இறைவனின் திட்டம் - திருவுளமென ஏற்கும் நாம், நம் வாழ்வின் ஏற்றத் - தாழ்வுகளில், நெருக்கடியில், நோயில், துன்பத் துயரத்தின் போது - இதுவும் நம் வாழ்வில் இறைவனின் திருவுளமென இயேசு காட்டிச் சென்றப் பாதையில் ஏற்கிறோமா... இனியாவது புனித வெள்ளி கற்றுத் தரும் பாடமிதனை உணர்ந்து வாழ்வோமே!

**உயிர்ப்புப் பெருவிழா** : திரு அவையின் கொண்டாட்டங்களில் இவ்விழா, மிகமிக முக்கியத்துவமும் தனிச்சிறப்பும் வாய்ந்தது. இயேசு வல்லமையும் ஆற்றலுமிக்க உண்மையான ஒரே கடவுள் என்பதற்கு முக்கியக் காரணமான நிகழ்வு இயேசுவின் உயிர்ப்பே! காயப்பட்ட உடலோடு கல்லறையில் அடக்கப்பட்ட இயேசு மகிமையோடு உயிர் பெற்று எழுந்தார்; உலகின் ஒளியானார். நாம் அவரது மக்கள்; உயிர்ப்பின் மக்கள். இயேசுவின் உயிர்ப்பு நமக்கு கற்றுக் கொடுக்கும் பாடம்... இறைவன் காட்டும் பாதையில், நற்செய்தி மதிப்பீடுகளின்படி வாழும்போது எல்லா அடக்குமுறையும் அராஜகமும் ஒரு நாள் தவிடுப்பொடியாகும். உண்மை பூமியிலிருந்து முளைத்தெழும். வானம் அன்பையும் நீதியையும் பனியெனப் பொழியும். நம்மை மீட்ட இயேசுவின் உயிர்ப்பு நமது உயிர்ப்பாகும்! உயிர்ப்பு ஞாயிறு, இயேசுவைப் போல் நம் நற்செயல்களால் உலகை உயிர்ப்பிக்க நமக்கு அழைப்பு விடுக்கிறது.

"மரணக் காற்றில்
ஒரு விளக்கைப்போல்
அணைந்து போகாதே.
ஊதுவத்தியைப் போல்
கொஞ்சம் நறுமணமாவது
விட்டு விட்டுப்போ" - கவிக்கோ அப்துல் ரகுமான்.

- செல்வி. **வி. லீமா ரோஸ்**

# திருவழிபாட்டு நாள்காட்டி

| நாள் | கிழமை | புனிதர்களின் நினைவு | முதல் & இரண்டாம் வாசகங்கள் | நற்செய்தி வாசகம் |
|---|---|---|---|---|
| 1. | வியாழன் | ஆண்டவருடைய இரவு விருந்து | விப 12:1-8, 11-14<br>1 கொரி 11:23-26 | யோவா 13:1-15 |
| 2. | வெள்ளி | புனித வெள்ளி | எசா 52 : 13-53:12<br>எபி. 4 : 14-16 5:7-9 | யோவா 18:1-19:42 |
| 3. | சனி | புனித இரவில் பாஸ்கா திருவிழிப்பு | எசே 36:16-17a, 18-28<br>உரோ 6:3-11 | லூக் 24:1-12 |
| 4. | ஞாயிறு | உயிர்ப்பு பெருவிழா | திப 10:34, 37-43<br>கொலோ 3:1-4 | யோவா 20:1-9 |
| 5. | திங்கள் | | திப. 2:14, 22-33 | மத் 28:8-15 |
| 6. | செவ்வாய் | | திப 2:36-41 | யோவா 20:11-18 |
| 7. | புதன் | | திப 3:1-10 | லூக் 24:13-35 |
| 8. | வியாழன் | | திப 3:11-26 | லூக் 24:35-48 |
| 9. | வெள்ளி | | திப 4:1-12 | யோவா 21:1-14 |
| 10. | சனி | | திப 4:13-21 | மாற்கு 16:9-15 |
| 11. | ஞாயிறு | உயிர்ப்புக்காலம் இரண்டாம் ஞாயிறு<br>இறை இரக்க ஞாயிறு | திப 4:32-35<br>1 யோவா 5:1-6 | யோவா 20:19-31 |
| 12. | திங்கள் | | திப 4:23-31 | யோவா 3:7-15 |
| 13. | செவ்வாய் | | திப 4:32-37 | யோவா 3:7-15 |
| 14. | புதன் | | திப 5:17-26 | யோவா 3:16-21 |
| 15. | வியாழன் | | திப 5:27-33 | யோவா 3:31-36 |
| 16. | வெள்ளி | | திப 5:34-42 | யோவா 6:1-15 |
| 17. | சனி | | திப 6:1-7 | யோவா 6:16-21 |
| 18. | ஞாயிறு | உயிர்ப்புக் காலம் மூன்றாம் ஞாயிறு | திப 3:13-15, 17-19<br>1 யோவா 2:1-5 | லூக் 24:35-48 |
| 19. | திங்கள் | | திப 6:8-15 | யோவா 6:22-29 |
| 20. | செவ்வாய் | | திப. 7:51-8:1 | யோவா 6:30-35 |
| 21. | புதன் | புனித ஆன்சல்ம் (ஆயர்) | திப 8:1b-8 | யோவா 6:35-40 |
| 22. | வியாழன் | | திப 8:26-40 | யோவா 6:44-51 |
| 23. | வெள்ளி | புனித ஜார்ஜ், புனித அடால்பெர்ட் | திப 9:1-20 | யோவா 6:52-59 |
| 24. | சனி | சிக்மரிங்கன் நகர்ப் பிதேலிஸ் | திப 9:31-42 | யோவா 6:60-69 |
| 25. | ஞாயிறு | உயிர்ப்புக் காலம் நான்காம் ஞாயிறு | திப 4:8-12<br>1 யோவா 3:1-2 | யோவா 10:11-18 |
| 26. | திங்கள் | | திப 11:1-18 | யோவா 10:1-10 |
| 27. | செவ்வாய் | | திப 11:19-26 | யோவா 10:22-30 |
| 28. | புதன் | புனித பீட்டர் ஷானல், புனித லூயிஸ் | திப 12:24-13:5 | யோவா 12:44-50 |
| 29 | வியாழன் | புனித கத்தரின் | திப 13:13-25 | யோவா 13:16-20 |
| 30 | வெள்ளி | புனித ஐந்தாம் பயஸ்: திருத்தந்தை | திப 13:26-33 | யோவா 14:1-6 |

# அன்பிய வழிகாட்டி

1. **தூய ஆவியார் பாடல்** : இறைபிரசன்னத்தை உணர்தல், தூய ஆவியானவரின் பாடலைப் பாடவும். இறைவார்த்தையை சொல்லி ஆண்டவரை ஆராதனை செய்யலாம்.

2. **தொடக்க செபம்** :

3. **வரவேற்றல்** :அன்பிய கூட்டத்திற்கு பங்கேற்க வருபவர்களை அன்பிய இல்லத்தார் மலர்ந்த முகத்துடன் வரவேற்றல்.

4. **அன்பிய இறைவேண்டல்** (10 மணி செபம்) : விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே... செபத்துடன் ஆரம்பித்து ஒவ்வொரு மணியிலும் நமது கருத்துக்களுக்காக ஒப்புக் கொடுத்து செபித்து, அருள் நிறைந்த மரியே வாழ்க செபம் சொல்லவும்.

5. **கடந்த கூட்ட அறிக்கை** : கடந்த மாதம் நடைபெற்ற கூட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையை வாசித்தல்.

6. **இறைவார்த்தை வாசித்தல்** : நற்செய்தி வாசகம் - யோவான் 20:1-9 (இரண்டு அல்லது மூன்று பேர் ஒவ்வொருவராக வாசிக்கலாம்).

7. **இறைவார்த்தையை பகிர்தல்** : வாசிக்கப்பட்ட நற்செய்தியிலிருந்து நமக்குத் தேவையான சிந்தனைகளை பகிர்ந்து கொள்ளுதல்.

- “சென்றார்... கண்டார்... நம்பினார்...” இவை மூன்றும் புனித யோவான் இயேசுவின் உயிர்ப்பு அனுபவத்தை தன்னுடைய நம்பிக்கை அனுபவமாக்கிக் கொண்ட படிநிலைகள்.
- இயேசுவின் உயிரற்ற உடலைத் தேடிப் போனவர்களுக்கு உயிருள்ள இயேசுவின் அனுபவம் பரிசாகக் கிடைத்தது.
- அன்று இயேசு உயிர்த்தது ஒரு முறை. ஆனால் இன்று பலமுறை நாம் இயேசுவாய் உயிர்த்தெழ வேண்டும்.

8. **பரிந்துரை மன்றாட்டுகள்** :

- சட்டமன்றத் தேர்தலுக்காக
- கொரோனாவின் அடுத்த அலையின் தாக்கம் குறைய
- சமய நல்லிணக்கம் மேம்பட
- குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கல்விக்காக

(இறுதியாக விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே என்ற செபம் சொல்லவும்)

9. **செய்திகள் பகிர்வு** : திரு அவை செய்திகள், பங்கு நிகழ்வுகள், அன்பிய நிகழ்வுகள்

10. **வாழ்த்து கூறுதல்** : அன்பியக் குடும்பங்களில் இந்த மாதம் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளை கொண்டாடுபவர்களுக்கு வாழ்த்துகளை பரிமாறுதல்.

11. **நன்றி கூறுதல்** : கூட்டத்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவருக்கும் நன்றிகளை தெரிவித்தல்.

12. **மரியன்னைக்கு புகழ் பாடல்**

## புனித வின்சென்ட் தே பவுல் சபை

# 80ஆவது ஆண்டு நிறைவு விழா (1940-2021)

புனித மரியன்னை பேராலயத்தின் கிளைச்சபையான புனித வின்சென்ட் தே பவுல் சபையானது 1940-ஆம் ஆண்டு முதல், ஏழைகளுக்காக அன்புப் பணியை - அறப்பணியை சிறப்பாக ஆற்றி வருகிறது. எம் சபையானது தனது 80-ஆம் ஆண்டு நிறைவு விழாவினை, 06.03.2021 அன்று தத்துவக்குடும்பங்களுடனும் நன்கொடையாளர்களுடனும் மிகச் சிறப்பாக கொண்டாடியது. விழா நிகழ்ச்சிகள், புனித மரியன்னை பேராலயத்தில் காலை 10.00 மணிக்கு நன்றித் திருப்பலியுடன் துவங்கியது. பங்குத்தந்தை அருள்பணி. T. சகாயராஜ், திருப்பலி நிகழ்த்தினார். இதில் இப்பங்கைச் சார்ந்தவர்கள், எம் உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் வின்சென்ட் தே பவுல் மத்திய சபைத் தலைவர்கள், வட்டார சபைத் தலைவர்கள், கிளை சபைத் தலைவர்கள் பங்கேற்றனர்.

திருப்பலிக்குப் பின்னர் பங்குத்தந்தை எம் சபை உறுப்பினர் அனைவருக்கும் 'வளர்க்கும் வளனார்' 'தவக்கால தயாரிப்பு' என்ற நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். எம் சபை சார்பாக பங்கிற்கு ரூ. 5000/-ம் பங்குத்தந்தையிடம் வழங்கப்பட்டது. திருப்பலி முடிந்ததும் கீழ்தளத்தில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சிக்கு பங்குத்தந்தை தலைமையேற்று தலைமையுரையும் ஆசியுரையும் வழங்கினார். உதவிப் பங்குத்தந்தை வாழ்த்துரையும் ஆசியுரையும் வழங்கினார். இறை வணக்கப்பாடலுக்குப்பின் உதவித் தலைவர் சகோ. M. ஜோசப் மார்ட்டின் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து பங்குத்தந்தையரும் வந்திருந்த சிறப்பு விருந்தினரும் பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். பின்னர் சபைப் பொருளாளர் திருமதி. நிர்மலா ஆண்டறிக்கை வாசித்தார்.

அடுத்து சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. மத்திய சபை மூத்த துணைத் தலைவர் சகோ. ஞானதிக்கம் "வின்சென்ட் தே பவுல் சபையின் தோற்றமும் வளர்ச்சியும்" பற்றியும், மத்திய சபை கல்வி அலுவலர் சகோ. அமலோற்பவம் சபையின் பணிகள் பற்றியும் உரை நிகழ்த்தினர். இறுதியில் மத்திய சபைத் தலைவர் சகோ. ஜேசுராஜ் திரவியம் மற்றும் மத்திய சபை செயலாளர் சகோ. பவுல் ராஜ் வாழ்த்துரை வழங்கினார். இச்சபையில் 25 ஆண்டுகளாக உறுப்பினராகவும் 6 ஆண்டுகளாக தலைவராகவும் இருந்து சிறந்த பணியாற்றி வரும் சகோ. விக்டருக்கு, பங்குத்தந்தை பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்.

அதன்பின், குழந்தைகளின் நடனமும் இளையோர் நடித்த சபாஷ் சர்வர் என்ற விழிப்புணர்வூட்டும் குறுநாடகமும் இடம் பெற்று நிகழ்ச்சியை கலகலப்பாக்கியது. இறுதியில் சகோ. ஹேமா நன்றி கூற, சபைப்பாடலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. நிகழ்ச்சிக்குப் பின்னர் அனைவருக்கும் விருந்தும் 80ஆம் ஆண்டு நினைவுப் பரிசும் வழங்கப்பட்டன. இச்சபையின் பணிகள் இறையருளால் இனியும் தொடரும்.

- சகோதரர் M. **விக்டர்**, தலைவர்.

## மார்ச் மாதம் – 2021

## திருமுழுக்கு பெற்ற குழந்தைகள்

| | குழந்தையின் பெயர் | பெற்றோர் பெயர் |
|---|---|---|
| 1. | ரோஷியன் ஆரோன் டாம்கின்சன் | லூர்து வினோத் - அனித்தா |
| 2. | மீனுவர்ஷினி | சந்தோஷ் - பாப்பு |

## சென்ற இதழின் சரியான விடைகள்

**I.** 1. நானூற்று முப்பது (12:40), 2. ஈயம் (15:10), 3. காரிருளை (20:21), 4. மூவாயிரம் (32:28), 5. ஒகொலியாபு (38:23).

**II.**
1. இரகுவேல் தம் புதல்வியரிடம் கூறியது (2:18)
2. பார்வோன் மோசேயிடம் கூறியது (10:28)
3. மோசே யோசுவாவிடம் கூறியது (17:9)
4. மோசே ஆண்டவரிடம் கூறியது (33:15)
5. ஆண்டவர் மோசேயிடம் கூறியது (40:15)

**III.** 1. தவறு (4:24) 2. தவறு (12:15) 3. சரி (20:19) 4. தவறு (17:13) 5. தவறு (23:14)

**IV.**
1. மார்ச் 5ஆம் தேதி (மார்ச் மாதத்தில் நிகழவிருப்பவை - பக். 4)
2. வெற்றி (நோன்பாக இருக்க வேண்டிய அடையாளங்கள் - பக். 12)
3. தவ வாழ்க்கை (வாழ்வே தவமாக - பக். 8)
4. சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் சேர்மேன் Dr. V. சாந்தா (பெண்ணே எழுந்து ஒளி வீசு - பக். 13)
5. கர்தினால் வின்சென்ட் நிக்கோலஸ் (திருஅவையின் செய்திகள் - பக். 15)






# உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்ட மரியா

இயேசு கிறிஸ்து உயிரோடு எழுந்த பின் அவரை முதலில் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ற பெண் இந்த மரியா (யோவான் 20:16). இயேசுவின் உயிர்த்தெழுந்த நற்செய்தியை சீடர்களுக்கும், மற்றவர்களுக்கும் அறிவித்தவரும் இவரே. இவர் மகதலேனா பட்டணத்தைச் சேர்ந்தவர். இயேசு ஏழு கொடிய பிசாசுகளின் பிடியிலிருந்து இவருக்கு விடுதலை கொடுத்தார். அந்த நாளிலிருந்து இயேசுவின் சீடத்தி ஆனாள். இயேசு கொடுத்த சுகம் அவள் வாழ்க்கையை மாற்றியது. இவள் ஒரு பெண்ணாக இருந்தாலும் தைரியமாய் அவரது சிலுவை மரணம், அடக்கம் வரை கூடவே சென்றாள் (மாற்க 15:40-47).

வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் இந்த மகதலா மரியா வேறொரு மரியாவுடன் கல்லறையை பார்க்க போனார். (லூக்கா 24:1). அங்குபோய் பார்த்தால் கல்லறையை அடைத்திருந்த பெரிய கல் எடுத்துப் போடப்பட்டிருந்தது. இயேசுவின் உடலும் அங்கு இல்லை. காலியான கல்லறையைப் பார்த்த மரியாவுக்கு மிகுந்த கலக்கம் ஏற்பட்டது. திரும்பி போகாமல் அழுது கொண்டிருந்தாள். அதே சமயம் உயிர்தெழுந்த இயேசு தனக்கு பின்னால் நிற்பதை அறியாமல் அவரைத் தோட்டக்காரன் எனத் தவறாக எண்ணிக் கொண்டாள். இயேசு மரியாவைப் பார்த்து 'ஏனம்மா அழுகிறாய்?' யாரைத் தேடுகிறாய் என்று கேட்டார்? மரியா அவரைத் தோட்டக்காரர் என நினைத்து, ஐயா நீர் அவரை எடுத்துக் கொண்டு போனதுண்டானால் அவரை வைத்த இடத்தை எனக்கு சொல்லும். நான் போய் அவரை எடுத்துச் செல்வேன் என்றார். அவளது அன்பின் ஆழத்தை அறிந்த இயேசு அவளது அழுகையை ஆனந்த களிப்பாக மாற்றும்படி தன்னை யார் என்று வெளிப்படுத்தினார், 'மரியா' என்றார். இந்த அழைப்பு அவளை சரியான உணர்வுக்குள் கொண்டு வந்தது. உடனே மரியா போதகரே என்று அழைத்தாள்.

இந்த மரியாவைப் போல நாமும் இக்கட்டான நிலைகளில் நம்மோடு கூட இருக்கும் ஆண்டவரை மறந்து அழுகிறோம். நம்மைப் பார்த்து இயேசு தன்னை வெளிப்படுத்தி, ஏன் அழுகிறாய்? என்று கேட்கிறார். மரியாவின் அழுகையை களிப்பாக மாற்றியவர் நம்முடைய துயரங்களையும் மாற்றுவார். மரியாவுக்கு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கொடுத்தவர் நமக்குப் பாவத்தின் பிடியிலிருந்து விடுதலை கொடுப்பார். மரியா தனக்கு விடுதலை கொடுத்த ஆண்டவர் மீது அன்பு செலுத்தி அவரோடு நடந்து ஊழியம் செய்தது போல நாமும் ஊழியம் செய்வோம். இயேசு உயிர்தெழுந்த செய்தியை மரியா சீடருக்கும் மற்றவர்களுக்கும் அறிவித்தது போல நாமும் அறிவிப்போம்.

**திருமிகு. ஹேமா ஸ்டீபன்**

# உயிர்த்தெழும் இயேசுவோடு விழித்தெழுவோம் நாளும்!

தோழர்களே, நம் ஆண்டவர் இயேசுவை ஒரு தெய்வமாக பார்த்த நாம் அவரை ஒரு வரலாற்று நாயகனாக, 2000 ஆண்டுகளுக்கும் முன்னதாக சமூகத்தில் நடந்த அவலங்களை எதிர்த்து, மூட நம்பிக்கைகளை வேரறுத்து, அநீதிக்கு எதிராக குரல் எழுப்பிய ஒரு புரட்சியாளராக பார்ப்பதற்கு பல நேரங்களில் நாம் தவறி விட்டோம். ஒரு மாபெரும் மக்கள் கூட்டத்தின் தலைவருக்குரிய அத்துணை தலைமைப் பண்புகளையும் ஒருங்கே பெற்றவராய் திகழ்ந்தவர் இயேசு. உண்மையை பயமின்றி உரக்க சொல்லும் போதும், அனைவருக்கும் அனைத்தும் பொதுவானது என்று உணர்த்தும் போதும், இன்றைய தலைவர்களைப் போல நம் வாழ்வை எளிதாக்குவதாக கூறி வாக்குறுதிகளையும் இலவசங்களையும் அள்ளி வழங்காமல் உங்கள் சிலுவையை சுமந்து கொண்டு என் பின்னே வாருங்கள் என்று கூறும் போதும் ஒரு தலைவருக்குரிய வழிகாட்டும் பண்பை இயேசுவிடம் நாம் காண்கின்றோம்.

தலைமை சரியாக இருந்தால் தான் ஒரு சமுதாயம் சரிவர இயங்க முடியும். தலைமையிலோ சட்டங்களிலோ பிசகு இருப்பின் அதனை எதிர்க்கும் மனவலிமையும் துணிச்சலும் புரட்சியாளர் இயேசுவை பின்பற்றும் நமக்கும் இருக்க வேண்டும். இயேசு என்னும் ஒரு மாமனிதரின் வாழ்விலும் சாவென்னும் சரிவு வந்தது. அந்த சாவினையும் வென்று அவர் வெற்றி ஆர்ப்பரிப்போடு உயிர்த்தெழுந்தார். இன்றைய நாட்களில் ஒவ்வொரு முறையும் மக்களுக்கு சரியான தலைமை அமையாத போது இயேசு உயிர் விடுகின்றார். ஆனால் தர்மத்தின் வாழ்வு தனை சூது கவ்வும். ஆனால் தர்மம் மறுபடியும் வெல்லும் என்னும் வாக்கிற்கேற்ப இயேசு உயிர்த்தெழுந்ததை போல சரித்திரத்தினை மாற்றி எழுதும் சக்தி படைத்தவர்களாக நாம் திகழ்கின்றோம்.

தலைமையை நிர்ணயிக்கும் நம் சக்தியினை உபயோகிக்கும் இந்த நேரத்தில், நம் உள்ளங்களில் தெளிவுடன் சமுதாயத்தின் நலனை கருத்தில் கொண்டு விழிப்புடன் இந்த தேர்தலை எதிர் கொள்வோம். உரிமைகளை மீட்டெடுப்போம். புதிய சமுதாயம் உருவாக தொடர்ந்து பிரார்த்திப்போம். சமுதாயத்தில் வெறும் பார்வையாளர்களாக இல்லாமல் நம் தலைவர் இயேசுவின் வழியில் சென்று நாம் வாழும் வாழ்க்கைக்கு அர்த்தத்தை ஏற்படுத்துவோம்.

- செல்வி. **மரிய கௌசல்யா**

# திரு அவை செய்திகள்

- அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெர்ஜீனியா மாநிலம், மரண தண்டனை நிறைவேற்றும் நடவடிக்கையை இரத்து செய்திருப்பது, வாழ்வுக் கலாச்சாரத்தை நோக்கி எடுத்து வைத்திருக்கும் துணிச்சலான முதல் முயற்சி என்று, அந்நாட்டு கத்தோலிக்க ஆயர்கள் கூறியுள்ளனர்.

- திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஈராக்கிற்கு மேற்கொண்ட திருத்தூதுப் பயணத்தை (மார்ச் 5-8, 2021) சிறப்பிக்கும் விதமாக, அந்நாட்டு அரசு, மார்ச் 6ம் தேதியை, சகிப்புத்தன்மை நாளாக அறிவித்துள்ளது.

- IAA எனும் இஸ்ரேல் தொல்பொருள் துறை, 2017ம் ஆண்டில் பாலைவனக் குகைகளில் துவக்கிய அகழ்வாராய்ச்சியின் பயனாக, விவிலியத்தின், பழைய ஏற்பாட்டின் ஏறக்குறைய 80 வெவ்வேறு எழுத்துப் பிரதிகள் கிட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1900 ஆண்டு கால பழமையுடைய விவிலிய சுருள்களின் பகுதிகள், இஸ்ரேல் நாட்டில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், கடந்த அறுபது ஆண்டுகளில் கிட்டியுள்ள மிக அரிதான புதையல் இது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

- 151 ஆண்டுகளுக்குமுன், புனித யோசேப்பு மற்றும், நற்செய்தியாளர் புனித யோவான் ஆகியோரோடு, அன்னை மரியா, காட்சியளித்த அயர்லாந்து நாட்டின் Knock தேசியத் திருத்தலத்தை, மார்ச் 19, புனித யோசேப்பு திருநாளன்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், காணொளிச் செய்தி ஒன்றின் வழியாக, பன்னாட்டுத் திருத்தலம் என்று அறிவித்துள்ளார்.

- 2019ம், ஆண்டு, இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவன்று, இலங்கையில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள் குறித்த உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற விண்ணப்பத்துடன், புத்த மதத்தினர் மற்றும் இஸ்லாமியர்களின் ஒருமைப்பாட்டுடன், நீதிக்கான அமைதிப் பேரணி ஒன்றை மேற்கொண்டனர், இலங்கை கத்தோலிக்கர்.

- தொகுப்பு : திருமிகு. **ஜெயந்தி**

# இறைவாக்குத் தேடல்

(விவிலியப் பகுதி : லேவியர் 1-27)

குறிப்பு :

- ✻ பதிலைத் தனித்தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் கொடுக்கவும், பெயர் அன்பியம், முகவரி குறிப்பிடவும், அதிகாரம் மற்றும் வசனம் குறிப்பிடவும்.
- ✻ பேராலய ஒலி இதழில் இருந்து கேட்கப்படும் கேள்விகளுக்குத் தலைப்பு மற்றும் பக்கம் குறிப்பிட்டு எழுத வேண்டும்.
- ✻ குடும்பத்திற்கு ஒருவர் மட்டுமே பங்கேற்க வேண்டும்.
- ✻ **சரியான விடை எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு மாதத்தின் முதல் ஞாயிறு காலை 8.30 மணித் திருப்பலியில் சிறப்பிக்கப்படுவார்கள்.**

**விடைகள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் :**
**பிரதி மாதம் 22ம் தேதிக்குள்**

## I. நிரப்புக

1. உன் நேர்ச்சைகள் அனைத்தோடும் ................ படைப்பாயாக.
2. காளையின் .................. முழுவதையும் எடுத்துப் பலிபீடத்தில் எரிப்பார்.
3. இரக்கத்தின் இருக்கையின்மேல் ................ நான் தோன்றுவேன்.
4. எந்த இறைச்சியையும் ................ உண்ண வேண்டாம்.
5. வானத்தை இரும்பைப் போன்றும் நிலத்தை .................. போன்றும் இறுகச் செய்வேன்.

## II. சரியா? தவறா?

1. பலிபீடத்தின்மேல் இருக்கிற நெருப்போ அணையாமல் எரிந்து கொண்டே இருக்க வேண்டும்.
2. மோசே மக்களுக்கு நேராகத் தம் கைகளை உயர்த்தி அவர்களுக்கு ஆசி வழங்கினார்.
3. நீங்கள் குடியிருந்த எகிப்து நாட்டின் வழக்கப்படி செய்ய வேண்டாம்.

4. தம் தந்தையும் தாயையும் சபிக்கும் எவரும் கொலை செய்யப்பட வேண்டும்.

5. ஆறாம் ஆண்டு ஆண்டவருக்காக ஓய்ந்திருக்கும் ஆண்டு.

## III. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | நெய்யப்பங்கள் | - | ஆண்டவருக்கு உகந்த நறுமணம் |
| 2. | பன்றி | - | நீர்மப்படையல் |
| 3. | கொழுப்பு | - | பதினொன்றரை கிராம் |
| 4. | திராட்சைப் பழ இரசம் | - | நன்றிப்பலி |
| 5. | ஒரு செக்கேல் | - | தீட்டு |

## IV. இதழில் தேடவும்

1. நான் வாழ்கிறேன், ................. வாழ்வீர்கள்.

2. .................... தனி மரியாதை செய்வோமே!

3. உடனே மரியா ..................... என்று அழைத்தாள்.

4. ................... உருவாக தொடர்ந்து பிரார்த்திப்போம்.

5. மார்ச் - 6 ஆம் தேதியை சகிப்புத்தன்மை நாளாக அறிவித்த நாடு எது?

---

### சென்ற மாத இறைவாக்குத் தேடல் போட்டியில் பங்கு பெற்றவர்கள்

S. எலிசபெத் ராணி, ஜோ. சுபா கிறிஸ்டினாள் - புனித செல்வநாயகி மாதா அன்பியம், ச. குழந்தை தெரஸ், D. மரிய சாரதா - ஜெஸ்டின் அன்பியம், R. ஜெயசீலி, B. பொலின் - லூர்து அன்னைஅன்பியம், S. மரிய பியூலா, B. ஜெனிபர் பிரிட்டோ ராஜ் - புனித செபஸ்தியார் அன்பியம், S. அன்னமேரி, T. கிறிஸ்டி, J. அனுசியா மேரி, S. டிரிஃபினா பிரின்சி - புனித பர்னபா அன்பியம், L. ஞானஜோயல், ஏ.தே. கிளாடியா செபாஸ்டின் - ஆரோக்கிய அன்னை அன்பியம், M.G. வின்ஸி கஸ்பார், X. நேவிஸ் சகாயமேரி - அந்தோணியார் அன்பியம், J. சகாயமேரி - புனித வளன் அன்பியம், L. இம்மாகுலேட், பெ. சுமி பெனா - புனித சகாயமாதா அன்பியம், J. ஜிரேஸ் ஜோபாய் - புனித பிரான்சிஸ் சேவியர் அன்பியம், S. ரீத்தா டெய்ஸி பாப்பு, S. ஹெபி இன்ஃபா, ஆஞ்சலா ராய் - புனித மோட்சராக்கினி மாதா அன்பியம், ஆ. ஹார்ட்லின் - புனித மத்தேயு கபிரியேல் அன்பியம்.

**அனைவருக்கும் செபங்களும் வாழ்த்துகளும்!**

# இம்மாத அன்பியக் கூட்டங்கள்

| தேதி | அன்பியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|
| 5.4.21 | பிரான்சிஸ் சேவியர் | கிளாடிஸா, கெம்ஸ்டவுன் |
| 5.4.21 | மோட்ச ராக்கினி மாதா | புனித மோட்சராக்கினி மாதா ஆலயம், பூந்தோட்டம் |
| 6.4.21 | ஆரோக்கிய அன்னை | ஜோசப் – ஸ்டெல்லா, மேலப்புதூர் |
| 7.4.21 | மத்தேயு கபிரியேல் | போப் பிரான்சிஸ் கூடம் |
| 8.4.21 | ஆசீர்வாதப்பர் | ஜோசப்–பாப்பு, மேட்டுத்தெரு |
| 8.4.21 | செபஸ்தியார் | புனித செபஸ்தியார் ஆலயம், கெம்ஸ்டவுன் |
| 9.4.21 | மலைமாதா | போப் பிரான்சிஸ் கூடம் |
| 9.4.21 | குழந்தை இயேசு | பீட்டர், வார்னர்ஸ் ரோடு |
| 10.4.21 | அந்தோணியார் | தேவக்குமார் – விக்டோரியா, செங்குளம் |
| 10.4.21 | மரியம் தெரசா | நோயல் ராஜேந்திரன் – சாந்தி, முதலியார் சத்திரம் |
| 10.4.21 | சவேரியார் | வேளாங்கண்ணி – ஜெனிப்பர், புனித சவேரியார் ஆலயம், செங்குளம் |
| 12.4.21 | பவுல் | கென்னடி – ஜெஸிந்தா, வடக்கு எடத்தெரு, பீமநகர் |
| 13.4.21 | அருளானந்தர் | லியோ, B.H.E.L. அப்பார்ட்மெண்ட் |
| 14.4.21 | சந்தியாகப்பர் | வின்சென்ட் – தேவ சகாயராணி, கெம்ஸ்டவுன் |
| 14.4.21 | லூர்தன்னை | காவலர் குடியிருப்பு |
| 15.4.21 | அந்தோணியார் | அலெக்ஸ் தெரஸ், மார்சிங்பேட்டை |
| 16.4.21 | திருஇருதய ஆண்டவர் | கண்டித்தெரு |
| 17.4.21 | செபஸ்தியார் | நவமணி – மெலின், செங்குளம் |
| 17.4.21 | அடைக்கல மாதா | புனித அடைக்கல மாதா ஆலயம், கூனிபஜார் |
| 18.4.21 | சிறுமலர் | யானைக்கட்டி மைதானம், பீமநகர் |
| 19.4.21 | பர்னபா | போஸ்கோ – விமலா ரெக்ஸின், ஆர்.சி. காம்பவுண்ட் |
| 20.4.21 | ஜெஸ்டின் | சதீஷ்குமார் – குழந்தை தெரஸ், நேமத்தான் தெரு |
| 21.4.21 | சகாயமாதா | லூயிஸ் – இமாகுலேட், இ.பி.கோ.தெரு |
| 22.4.21 | செல்வநாயகி மாதா | மதுரம் கிருபை – மில்வன், ஆலம்தெரு |
| 23.4.21 | அன்னை தெரசா | தாமஸ் – ஆக்னஸ் லூர்து, ஒத்தக்கடை |
| 24.4.21 | வளன் | பிரான்சிஸ் சேசுராஜ் – பவுலா, பீமநகர் |
| 26.4.21 | செசிலியா | கான்வென்ட்ரோடு |
| 27.4.21 | அமலோற்பவ மாதா | ஜான் ஜூடு – கோமதி, காஜாப்பேட்டை |
| 28.4.21 | மரியன்னை | ஜெயில்பேட்டை |

## தவக்கால சிற்றூர் சந்திப்பு - அரசங்குடி, விளாங்குளம்









## தவக்கால அருங்கொடை முழு இரவு செப வழிபாடு




## புனித வளன் அன்பிய ஆண்டுவிழா



## புனித வின்சென்ட் தே பவுல் சபை ஆண்டுவிழா



## நோயுற்றோருக்கான சிறப்புத் திருப்பலி







## தவக்கால தியானம்










## பெண்கள் தின விழா








## கிளைக்கோயில்களில் சிலுவைப்பாதை







## குருத்து ஞாயிறு

